வாக்குமூலம்
உரிமையியல்மற்றும்குற்றவியல்நடுவர்நீதிமன்றம், மாதவரம்
வழக்குஎண். CC 106/2021
வழக்குசாட்சி LW1/PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கல்பனா | ஜாதி | |
| கணவர்/தந்தை | பாலச்சந்தர் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 33 |

தேதி 12.02.2026
எதிரி ஆஜர்.
சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது கணவருடன் ஏசி மேக்கானிக் வேலை செய்து வந்தார். எனக்குத் தெரியும். 29.11.2019 அன்று ஏசி மேக்கானிக் வேலைக்காக இரவு வேலைக்குச் சென்றவர் 3வது மாடியில் கொளத்தூரில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்த போது கீழே விழுந்து அடிப்பட்டதாக எனக்கு ஆஜர் எதிரி தான் போன் மூலம் தகவல் கூறினார். நான் அப்போது எனது அம்மா வீட்டில் திருவண்ணாமலையில் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்து தான். மேற்படி புகாரானது அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணைச் செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனது கணவர், ஆஜர் எதிரி, பட்டியல் சாட்சிகள் 2,3,4 எனது கணவருடன் தினகூலிக்கு வேலைக்குச் செல்பவர்கள் என்றால் ஆமாம். நால்வருமே New Brushing point நிறுவனத்தின் வேலையை பார்த்து வந்தார்கள் என்றால் ஆமாம். எனது கணவர் விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ஆமாம். எனது கணவரை நான் விபத்திற்கு பிறகு அரசு ஸ்டேன்லி மருத்துவமனையில் தான் பார்த்தேன் என்றால் ஆமாம். புகாரில் என்ன எழுதியிருந்த்த்து என்றால் எனக்குத் தெரியாது. போலீசார்

கேட்டுக் கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.